# இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்கான ஊழியர் பணிக்கொடை ஏற்பாட்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 151,992 தொகை குறைவாகவும் 4 உத்தியோதகத்தர்களுக்கு ரூபா 228,455 அதிகமாகவும் ஒதுக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அடுத்து வரும் மாதத்தில் 20 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் சிக்கன சேவைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2002 முதல் 2004 வரையான காலத்திற்கும் 2009/2010 மதிப்பீட்டு ஆண்டிற்குமாகச் செலுத்த வேண்டிய வரி முறையே ரூபா 21,078,417 மற்றும் ரூபா 6,786,872 தொகைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 இன் 13 ஆம் இலக்க சிக்கன சேவைக் கட்டண (ஈஎஸ்சீ) அதிகாரச்சட்டம். | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அடுத்து வரும் மாதத்தில் 20 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் சிக்கன சேவைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2007 ஒக்டோபர் முதல் 2011 மார்ச் வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா 21,184,217 தொகையான பொருளாதார சேவைக் கட்டணம் 2011 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | (i) நி.பி. 110 | கூட்டுத்தாபனத்தினால் நட்டப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி. 371(2)(ஆ) | துணைக்கட்டுநிதி ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 20,000 இற்கு மேற்படாதிருக்க வேண்டிய போதிலும் கட்டுநிதி வழங்கப்படுவது எதுவிதத்திலும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் இதற்கு முரணாக 6 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,107,013 தொகை கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது. இக்கட்டுநிதி எல்லை அதிகரிப்பது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் கோரப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நி.பி. 1645(அ) | கூட்டுத்தாபனத்தின் வாகனங்களுக்காக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட சம்பவக் குறிப்பேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 சனவரி 03 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சேதமுற்ற வாகனங்கள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்ளின் படி, மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளிலான விளைவு ரூபா 68,969,869 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 59,423,908 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,545,961 தொகையான வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டியுள்ளது.

மீளாய்வாண்டின் போது நிர்வாகம், விற்பனை, பகிர்ந்தளிப்பு மற்றும் நிதிச் செலவினங்களின் அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமாகியது.

### 2.2 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

வர்த்தக நிறுவகத்தில் இருக்க வேண்டிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின் விகிதம் 2:1 ஆன போதிலும், கூட்டுத்தாபனத்தின் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகளிற்கிடையிலான விகிதம் 1:1.24 ஆன காரணத்தினால் தொழிற்பாட்டு மூலதனச்சிக்கல் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீன்கள் இறக்குமதி செய்யும் செயற்திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த திறைசேரிக் கடன்தொகையான ரூபா 50 மில்லியனுக்காக முறையே 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு ரூபா 20 மில்லியனாகவும் 2013 யூன் மாதம் இறுதியில் உள்ளவாறு ரூபா 10 மில்லியனாகவும் செலுத்தி பூர்த்திசெய்வது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையான போதிலும் எவ்வித தவணைக் கொடுப்பனவையும் மேற்கொள்வதற்குக் கூட்டுத்தாபனம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைத்தியசாலைச் செயற்திட்டத்திற்காக திறைசேரியில் இருந்து பெறப்பட்ட ரூபா 16 மில்லியன் கடன் தொகை உரிய உடன்படிக்கையின் பிரகாரம் 2011 ஆகஸ்ட் அளவில் செலுத்தி பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 2011

திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4.4 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(இ) பகிர்ந்தளித்தல் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது திறைசேரியில் இருந்து பெறப்பட்ட ரூபா 50 மில்லியன் கடன் தொகை உடன்படிக்கையின் பிரகாரம் 2012 சனவரி மாதம் செலுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் எவ்வித தவணைப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பயன்படுத்தப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்வது அரசாங்கத்தின் கொள்கையல்லாத போதிலும் ரூபா 968,850 பெறுமதியான பயன்படுத்தப்பட்ட குளியலறை மற்றும் படுக்கை அறைகளின் தளபாடங்கள் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ஏலவிற்பனையில் கொள்வனவு செய்யப்பட்டு தலைமைக் காரியாலயக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) ஊழியர் கடனை அறவிடுதல் முன்னேற்றம் தொடர்பான மாதாந்த அறிக்கை நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடன் அடிப்படையில் மீன்கள் வழங்கப்படுகையில் கடன் தவணைப்பணத்தை தாமதமின்றி அடுத்துவரும் மாதச் சம்பளத்தில் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் ரூபா 32,129,569 தொகையான நிலுவைக் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 (பீ) பந்தியின் பிரகாரம் குறித்த எரிபொருள் எல்லையைக் கருத்திற்கொள்ளாது தலைவர், உபதலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் போன்ற பதவிகளுக்காக வரையறையின்றி எரிபொருள் வழங்குவதற்கு 2010 திசெம்பர் 22 ஆம் திகதிய 960 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபை அங்கத்தவர் இத்தீர்மானத்திற்கு உடன்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வரையறையின்றி பெறப்பட்ட எரிபொருள் பெறுமதி ரூபா 312,023 ஆகக் காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் மீன் விற்பனையினால் பெறப்பட இருந்த ரூபா 32,129,569 தொகையான கடன் மீதியினை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது பொதி இருப்பில் ரூபா 2,558,028 தொகையான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்பார்வை அமைச்சினால் பொது முயற்சிகளின் வளங்களைப் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவது பொருத்தமற்றதாகவும் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி பொது முயற்சிகளின் மனித வளப் பராமரிப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்படலாகாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் 11 உத்தியோகத்தர்கள் அமைச்சுச் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,359,405 தொகை கூட்டுத்தாபனத்தினால் ஏற்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் துாரநோக்கும் செயற்பணியினையும் மேற்கொள்வதற்காக கூட்டுத்திட்டம் 2011 – 2013 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டுத் திட்டம்

வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபையினால் இது அங்கீகரிக்கப்பட்டிராததுடன் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மீன்களின் கொள்வனவும் விற்பனையும்

(ஆ) வரிக்கொடுப்பனவு

(இ) பணிக்கொடைக் கொடுப்பனவு

(ஈ) வருமானச் சேகரிப்பு

(உ) கணக்கீடு

(ஊ) எரிபொருள்